திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த நீண்ட தூரம் ஓடுகின்ற பஸ்களிலே சீட் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சீட் முறையானது கஷ்டமாக இருக்கிறது. 2-க்கு மூன்று சீட் அமைத்திருக்கிறார்கள். இதை 2-க்கு 2 ஆக அமைத்து அதில் கைவைப்பதற்கு இடங்கள் வைத்து நல்ல முறையில் இருக்கவேண்டும். இரவு நேரங்களில் ஓடுகின்ற பஸ்களில் இந்த வசதி செய்ய முயல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இப்போது அண்மையிலே கட்டப்பட்டு விடப்பட்ட பேருந்துகள் 33-க்கு 2 வகையில் நல்ல வசதியோடு இருக்கும், மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப் பேருந்துகளில் இன்னும் வசதிகள் வைக்காத காரணம் அந்த மெஷின்கள் எல்லாம் வாங்குவதற்கு கூட ஏற்பாடுகள் நடைபெற்றபோது அண்மையில் நடந்த யுத்தத்தின் காரணமாக அவைகளை பெற முடியவில்லை. அவைகளைப் பெறுவோமானால் எல்லா பஸகளிலும் 3-க்கு 2 வகையில் இருக்கின்ற பேருந்துகள் வசதியாக இருக்கும். இருந்தாலும் கூட 2-க்கு 2 சீட்டுகள் என்ற அளவில் டூரிஸ்டு லக்சரி கோச்சுகள் என்ற முறையில் அரசாங்க போக்குவரத்துத் துறையில் ஒரு 10 அல்லது 15 பேருந்துகள் கட்டுவதற்கு ஒரு திட்டம் நடைமுறையில் இருக்கிறது.

தொலைதூர துரிதப்பேருந்துகளின் பெயர்கள்

* 206 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான தொலைதூர துரிதப் பேருந்துகளுக்கு தமிழ் மன்னர்களின் பெயரையும் தலைவர்களின் பெயரையும் வைக்கும் உத்தேசம் ஏதேனும் அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

Lorries emitting smoke

* 207 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether it is a fact that lorries and cars were booked by police in the City of Madras around the first week of September 1971 due to their emitting too much of smoke; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 1971, செப்டம்பர் திங்கள் முதல் வாரத்தில் சென்னை மாநகரத்தில் அதிகமான அளவு புகையை வெளிவிடும் காரணத்திற்காக லாரிகள் மீது மட்டுமே காவலர்களால் வழக்கு பதிவு செய்யப்பட்டது. கார்கள் பொதுவாக அதிகமான அளவு புகையை வெளிவிடா என்ற காரணத்திற்காக, கார்கள் மீது வழக்கு பதிவு செய்யப்படவில்லை.

(இ) 1971 செப்டம்பர் முதல் வாரத்தில் மும்முர ஊக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மக்கள் நல்வாழ்வுத் துறை

அமைச்சரைத் தலைவராகக்கொண்டு காற்று தூய்மை கெடுதல் தடுப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. 1971, செப்டம்பர் முதல் வாரத்தில் இது குறித்து 212 லாரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

DR. H. V. HANDE: Sir, may I know whether action is being taken against State Transport Buses also. Also whether it is a fact that a large number of State Transport Buses are quite old and therefore they emit a lot of smoke. As the Police Department are not able to take action against them, what the Government propose to do in the matter. Also, what are the rules and regulations governing it?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, எனக்கு கிடைத்த தகவல்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அரசாங்கத்துக்கு இல்லாத அக்கறை சுதந்திரா கட்சி உறுப்பினருக்கு இருப்பதால் ஆட்சேபனையில்லை. இருந்தாலும் அரசாங்க பஸ்களை அத்தகைய வழக்குகளில் பதிவு செய்யப்படவில்லை. அவைகளில் புகை கிளப்ப முடியாத அளவுக்கு சீர்திருத்த முயற்சிகள் படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

DR. H. V. HANDE: Sir, I take exception to the expression of the Hon. Minister regarding party politics. Even the Members of the Public Accounts Committee wanted the Government to rectify these defects and therefore there is no party politics involved in the matter. My question is whether any action has been taken by the Government wherever buses are in a dilapidated condition and are emiting smoke?

THE HON. THIRU K. ANBAZHAGAN: Mr. Speaker, one of the officials of the Transport Department is also a member of the Committee that has been formed. He is taking precautionary measures as far as possible in the Transport Department.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இதை பார்க்க வேண்டுமென்று பொதுவாக குழுக்கள் போடப்பட்டு அந்த குழுக்கள் செயற்படுவதற்கு முயற்சிகள் அரசாங்கப் போக்குவரத்து துறையில் மேற்கொள்ளப் படுகின்றன. இருந்தாலும், நாம் எல்லோரும் நன்றாக இருக்கவேண்டுமென்று விரும்பினாலும் கூட வியாதி நீடிக்கிறது. அதே போல் இந்த வியாதி நீடிக்கிறது.

அரசு போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்கு ஊக்கப் பூரிப்பூதியம்

*208 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தனியார் பேருந்துகளில் உள்ளது போல், அரசுப் போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்கும் ஊக்கப்படுத்தும் வகையில் வசூல் படி (Collection Batta) அளிக்க திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?